105—

வட்டாட்சியர் அலுவலகம்

*26275—**திரு. செ. தாமோதரன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி வட்டாட்சியர் அலுவலகத்தை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பொள்ளாச்சி வட்டாட்சியர் அலுவலகத்தை விரிவுபடுத்துவது தொடர்பாக, உரிய செயற்குறிப்பு அரசுக்குக் கிடைக்கப் பெற்றவுடன், புதிய கட்டடத்தின் தேவை குறித்து அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன், அவையில் இல்லை.*

வினா வரிசை எண் 106, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ், மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

106—

சுற்றுலா மையம்

*55413—**திருமதி ரா. லீமா றோஸ்:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டாறு தொகுதி, முத்துக்குழி வயலை சுற்றுலா மையமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2010 ஏப்ரல் 27]

(அ) மற்றும் (ஆ) சுற்றுலாத் துறைமூலம் எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. இருப்பினும், ஒரு சுற்றுலாப் பகுதியின் முக்கியத்துவம் மற்றும் அவ்விடத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு, அங்கு தேவையான சுற்றுலா அடிப்படை வசதிகள் செய்யப்படுகின்றன. கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதி, முத்துக்குழி வயல் பகுதியில் அடிப்படை வசதிகள் செய்து தரும் செயற்குறிப்பு ஏதும் தற்போது துறையின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ், அவையில் இல்லை.

வினா வரிசை எண் 107, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

107—

கட்டட வசதி

***35041—திருமதி பி. பத்மாவதி:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, வாழ்க்கை ஊராட்சியில் நெல் கொள்முதல் நிலையம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், வாழ்க்கை ஊராட்சியில் சேங்கனூர் கிராமத்தில் நேரடிக் கொள்முதல் நிலையம் 12 இலட்சம் ரூபாயில் கட்டி முடிக்கப்பட்டு, 10—2—2010 முதல் செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி, அவையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. என்.ஆர். ரெங்கராஜன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS